16th August 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு என்னிடம் புகார் வரவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர்: தேர்ச்சி பெறாத மாணவர்களில் அநேகமாகப் பலர் சோஷல் ஸ்டடியில் தான் தோற்றுவிட்டார்கள் என்பது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எந்த எந்தக் காரணத்தினால் என்கிற விவரம் என்னிடம் இல்லை. பொதுவாகச் சரியாகப் படிக்காதது தான் ஒரு காரணம்.

திரு. அ. ராகவ ரெட்டி: தனியார்ப் பள்ளிகளில் படித்துத் தேர்ச்சி பெற்றவர்களைவிட ஜில்லா போர்டு பள்ளிகளில் படித்துத் தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதனால் ஜில்லா போர்டு பள்ளிகளில் சொல்லிக்கொடுக்கும் திறனை இவ்வாண்டாவது அதிகரிக்கச் செய்ய ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் ஒவ்வொரு ஆண்டும் இந்தப் புகாரைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டிலே நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: பரிட்சையில் தேர்ச்சி பெற்றவர்களுடைய புள்ளிவிவரத்தை ஜில்லா அடிப்படையில் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் கொடுக்கலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: ஜில்லா போர்டு பள்ளிகளில் வாத்தியார் இல்லாததனால் தான் அதிகமான மாணவர்கள் ஃபெயிலாகின்றார்கள் என்று சொல்லப்படுகிற காரணம் உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு இருக்க முடியும் என்று என்னால் ஒத்துக்கொள்ள முடியாது.

Cuddalore Municipality.

* 157. *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(*a*) whether the Government are aware of the reasons for the wholesale resignations of the Chairman and Councillors of Cuddalore Municipality during May 1963; and

(*b*) if so, the steps taken for the continuous functioning of the Municipality?

THE HON. SRI S. M. A. MAJID: (*a*) Yes.

(*b*) As the Municipal administration cannot be carried on with the existing strength of the Municipal council, a notice to show cause against the dissolution of the Municipal Council, Cuddalore, has been issued to the Municipal council. The Commissioner of the Municipality will carry on the normal day-to-day administration of the Municipality.

(அ) ஆம்.

(இ) கடலூர் நகராட்சி மன்றத்தில் தற்போதுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கொண்டு நகராட்சி அலுவல்களை நடத்த முடியாததால், மேற்படி நகராட்சி மன்றத்தை ஏன் கலைக்கக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டும்படி கடலூர் நகராட்சி மன்றத்திற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. கடலூர் நகராட்சியின் அன்றாட அலுவல்களை மேற்படி நகராட்சி ஆணையாளரே கவனித்துக் கொள்வார்.

திரு. சா. கணேசன்: நகராட்சி மன்றத்தின் அங்கத்தினர்களில் மிகப் பெரும்பாலோர் ராஜிநாமாச் செய்வதற்குக் காரணம் என்ன? அரசாங்கத்தின் தலையீடு தான் காரணமா? அல்லது வேறேதேனும் காரணம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கனம் அங்கத்தினர் கருதுவது போல அரசாங்கத்தின் தலையீடு ஒன்றும் காரணம் இல்லை. கடலூர் நகராட்சி மன்ற நிதி நிலையே மிகவும் பற்றாக்குறையாக இருந்தது. நகராட்சி மன்றத்தின் வருமானத்தை அதிகப்படுத்த ஏன் இன்னும் கொஞ்சம் வரிவிதிப்பின் சத விகிதத்தை உயர்த்தக் கூடாது என்று முன்பு சொன்னோம். இது தலையீடாகாது.

திரு. கே. ஏ. மதியழகன்: கடலூர் நகரசபையைக் கலைத்து விடுவதாக சர்க்கார் உத்தேசித்திருப்பது உண்மையா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஏன் கலைக்கக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டும்படி கடலூர் நகராட்சி மன்றத்திற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது என்று தான் நான் சற்று முன்பு சொன்னேன். கடலூர் நகராட்சி மன்றத்தின் மொத்த ஸ்தானங்கள் 32. அதில் நான்கு ஸ்தானங்கள் காலியாக இருந்தது. பாக்கியிருந்த 28 அங்கத்தினர்களில் 23 பேர்கள் ராஜினமாச் செய்தார்கள். மீதியுள்ள 5 அங்கத்தினர்களை வைத்துக்கொண்டு நகராட்சி மன்றக் கூட்டங்களை நடத்துவது என்பது முடியாத காரியம். அதனால் தான் இதைக் கலைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: கட்டாயமாக வரி விதிக்கத்தான் வேண்டுமென்று சர்க்கார் வற்புறுத்தியதன் காரணமாகத்தான் நகராட்சி மன்ற உறுப்பினர்கள் ராஜினமாச் செய்ய முன் வந்தார்கள் என்பது உண்மையா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: மற்ற வரிகளுக்கும் எஜுகேஷனல் டாக்சுக்கும் வித்தியாசம் உண்டு. கல்வி வரி என்று நகராட்சி மன்றம் எவ்வளவு வசூல் செய்கிறார்களோ அதே தொகை அரசாங்கம் உதவித் தொகையாக ஒவ்வொரு நகராட்சி மன்றத்திற்கும் கொடுத்து வருகிறது. ஆகவே இந்தக் கல்வி வரியை விதிக்க முடியாது என்று எந்த நகராட்சி மன்றமும் ஆட்சேபிப்பதற்குக் காரணம் இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கடலூர் நகராட்சி மன்றத்தைப் பொறுத்த வரையில் ஏற்கனவே 32 சத விகிதத்திற்கு வரி விதித்திருக்கின்ற காரணத்தினால் இனிமேலும் 5 சத விகிதம் அதிகமாக

16th August 1963]

வரியைக் கூட்டுவதானது பொதுமக்களை அதிகமாகப் பாதிக்கும் என்பதனால் இந்தக் கல்வி வரியை விதிக்கக்கூடாது என்றதோடு இதனால் வரக்கூடிய பணத்தை ஏற்கனவே இருக்கக்கூடிய தண்ணீர் வரியோடு ஈடு செய்துவிடுவதாக அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டார்களா? அப்படி மற்ற இனத்தின் மூலமாக ஈடு செய்வதாக அவர்கள் விண்ணப்பித்துக்கொண்டிருந்தும் அரசாங்கம் அனுமதி கொடுக்காததன் காரணம் என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கனம் அங்கத்தினர் சொல்வது போல, ஏற்கனவே 32 சத விகிதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது, அதற்கு மேல் 5 சத விகிதம் உயர்த்தச் சொன்னார்கள் என்பது சரியாக இருக்காது. குறிப்பிட்ட ஒரு வரியை விதிக்காமல் மற்ற வரிகளின் மூலம் ஈடு செய்வதாக அவர்கள் சொல்லியிருக்கலாம். இருந்தாலும் அவர்களுடைய ஜெனரல் பண்டிலேயே 68 ஆயிரம் சொச்சம் பற்றாக்குறை இருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர்: கல்வி வரி விதிப்பதைப் பற்றி நகராட்சி மன்றத்தின் ரிப்போர்ட் என்ன சொல்லுகிறது? அந்த வரியை விதிக்கக்கூடாது என்றுதான் எதிர்த்திருக்கிறார்களா?

கனம் சே. ம. அ. மஜீத்: சர்க்கார் 1960-61 பட்ஜெட் எஸ்டிமேட்டிலேயே பற்றாக்குறை இருப்பதைச் சுட்டிக்காட்டி, ஏன் வரியை உயர்த்தக்கூடாது என்று கேட்டார்கள். அவர்கள் மறுத்துவிட்டார்கள். பின்பு 1962 பட்ஜெட்டிலேயும் இந்தப் பற்றாக்குறை எடுத்துக் காட்டப்பட்டது. கமிஷனர் ஒத்துக்கொள்கிறார், கவுன்சில் தான் ஏற்றுக்கொள்ளவில்லை.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, பற்றாக்குறையைப் போக்க அரசாங்கம் கூறிய யோசனையை ஏற்றுக் கொள்ளாது தண்ணீர்க் கட்டணத்தை ஏற்றுவதன் மூலமாகப் பற்றாக்குறையைப் போக்கலாம் என்ற யோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மறுத்தது ஏன்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அம்மாதிரி ஒரு யோசனை கூறியதாக என்னிடம் தகவல் இல்லை.

ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் (கலெக்டராக நியமனம்)

* 158 **கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர்: கனம் முதல் அமைச்சர்** தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜில்லா கலெக்டர்களாக நியமிக்கப்படுபவர்கள் ஐ.ஏ.எஸ். பரீட்சை பாஸ் செய்த பிறகு ஏழு ஆண்டுகள் வேறு பல துறைகளில் அனுபவம் பெற்ற பிறகே அந்தப் பதவிக்கு நியமிக்கப்படவேண்டுமென்ற உத்தரவு ஏதேனும் மத்திய சர்க்காரிடமிருந்து சென்னை அரசாங்கத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆமென்றால், அதன்மீது மாநில சர்க்கார் கொடுத்த பதில் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) No.

(இ) Does not arise.